# என் கை உன்னோடே உறுதியாயிருக்கும். சங் 89 : 21

**தேவனின் கை உன்னோடே உறுதியாயிருக்கும்**

அன்பு சகோதரினே, சகோதரியே,

**"தேவனுடைய கை"** உங்களோடே உறுதியாயிருப்பதற்காக தேவனைத் துதியுங்கள். ஏனெனில் மாம்சத்தின் கைகளை நீங்கள் நம்பி ஏமாற்றம் அடைந்தீர்கள்.

**"எனக்கு வலது கை,"**என்று நீங்கள் சாட்சி கொடுத்தவர்கள், எங்கேயோ தூரம் போய்விட்டார்கள். உங்கள் கைகளைத் தாங்குவார்கள் என நினைத்தீர்கள். ஆனால் இன்று அவர்கள் உங்கள் கையைப் பிடித்து தொங்க ஆரம்பித்து விட்டார்கள். முன் நிலைமையைப் பார்க்கிலும், பின் நிலைமை கேடுள்ளதாயிருக்கிறதல்லவா. பயப்பட வேண்டாம்.

**தேவனின் கை உங்களோடே உறுதியாயிருக்கும்**

தேவனின் கை குஷ்டரோகியை சுத்தப்படுத்தியது. ஜுரத்தை நீக்கியது; சிறு பெண்ணை உயிரோடெழுப்பியது. சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தது. செவிடரின் காதை திறந்தது. குருடரின் கண்ணை திறந்தது. இப்படிப்பட்ட **"தேவனின் கை"** உன்னோடே உறுதியாயிருக்கும்.

**ஏசாயா 53 : 10 கூறுகிறது :** கர்த்தரின் சித்தம், அவர் கையினால் வாய்க்கும் –என்பதாக.

**ஏசாயா 59 : 1 கூறுகிறது :** கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை–என்பதாக.

**உறுதியாயிருக்கும் : சங் 89 : 21 ல்** என் கை தாவீதோடே உறுதியாயிருக்கும் என வாசிக்கிறோம்.

அப்படியானால் **"தேவனின் கை என்னோடே உறுதிாயிருக்கும்"**என்று நீங்களும் விசுவாச அறிக்கை செய்யுங்கள். **உங்கள் உள்ளத்தில் உறுதி தேவை.** உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன். உம்மையே நம்பியிருக்கிறபடியால், அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். என்பதாக. வேதம் கூறுகிறது.

**பக்தன் பாடுகிறான்.**

வெள்ளங்கள் புரண்டு மோதினாலும்,
உள்ளத்தன் உறுதி அசையாதே,
ஏழுமடங்கு நெருப்பின் நடுவிலும்,
இயேசு நம்மோடங்கு நடக்கிறார்.

எக்காலத்தும் நம்பிடுவோம்
திக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்கபலம் பாதுகாப்பும்,
இக்கட்டில் இயேசுவே அடைக்கலம்.

சேனைகளின் கர்த்தர் நல்லவரே, சேதமின்றி நம்மை காப்பவரே.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

இந்த மாதத்தில் மேற்கண்ட பாடலை அடிக்கடி பாடுங்கள். பாடிக்கொண்டே இருங்கள்.

**1 பேதுரு 5 : 9ல் வாசிக்கிறோம்.** விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

**2 பேதுரு 3 : 17 கூறுகிறது :** அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு, உங்கள் உறுதியிலிருந்து, விலகி, விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். என்பதாக.

**எபிரேயர் 3 : 14 கூறுகிறது :** நாம் ஆரம்பத்திலே கொண்ட நமபிக்கையை முடிவு பரியந்தம் **உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில்** பங்குள்ளவர்களாயிருப்போம் – என்பதாக.

**எபிரேயர் 4 : 14 கூறுகிறது :** வானங்கள் வழியாய் பரலோகத்திற்கும் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம்.

கர்த்தரின் கை குறுகவில்லை
கர்த்தரின் வாக்கு மாறிடாதே,
சுத்தர்களாய் மாறிடவே, சுதன் அருள் புரிந்தனரே,
விசுவாசியே நீ பதறாதே, விசுவாசியே நீ கலங்காதே
விசுவாசத்தால் நீதிமான் இன்றும், என்றும் பிழைப்பான்.

**தேவனுடைய கை உங்களோடே உறுதியாயிருக்கும். ஆமென்.**